ஒழிபியலில் விளக்கப்பட்டுள்ளன.

## ஒழியாவது இன்னது என்பது

210. ஒழிபு எனப்படுவது அகப்பாட்டு உறுப்பும்
வழுவும் அமைவும் தழுவியது ஆகும்.

ஒழிபு (ஒழிபியல்) எனப்படுவது முன்னுள்ள இயல்களில் சொல்லத் தப்பிய உறுப்புகளையும் அகப்பாட்டு இலக்கணத்தையும் விளக்கும் ஒன்றாகும்.

(1)

## அகப்பாட்டு உறுப்புகள்

211. திணையே கைகோள் கூற்றே கேட்போர்
இடனே காலம் பயனே முன்னம்
மெய்ப்பாடு எச்சம் பொருள்வகை துறை என்று
அப்பால் ஆறிரண்டு அகப்பாட்டு உறுப்பே.

திணை முதலாகத் துறை ஈறாக உள்ள பன்னிரண்டு பகுதிகளும் அகப்பாட்டு உறுப்புகள் ஆகும்.

| | | | |
|---|---|---|---|
| *1. திணை* | *4. கேட்போர்* | *7. பயன்* | *10. எச்சம்* |
| *2. கைகோள்* | *5. இடன்* | *8. முன்னம்* | *11. பொருள்வகை* |
| *3. கூற்று* | *6. காலம்* | *9. மெய்ப்பாடு* | *12. துறை* |

(2)

## 1,2 திணையும் கைகோளும்

212. அவற்றுள்,
முன்னவை இரண்டும் சொன்னவை ஆகும்.

மேற்சொல்லப்பட்ட பன்னிரண்டு பகுதிகளில் முதலிலுள்ள **திணை** (1), **கைகோள்** (26) என்னும் இரண்டும் அகத்திணையியலில் விளக்கப்பட்டவை ஆகும்.

**1. திணை:** **மலர்தலை உலகத்துப் புலவோர் ஆய்ந்த**
**அருந்தமிழ் அகப்பொருள் கைக்கிளை ஐந்திணை**
**பெருந்திணை எனஎழு பெற்றித்து ஆகும்**

**(தொல்.பொருள். 1)**

என்னும் நூற்பாவில் **1.கைக்கிளையும் ஐந்திணைகளாகிய, 2. குறிஞ்சித் திணை, 3. பாலைத்திணை, 4.முல்லைத் திணை, 5.மருதத்திணை, 6. நெய்தல் திணை** என்பவையும் **7.பெருந்திணை** என்பதும் சொல்லப்பட்டுள்ளன.

**2. கைகோள்:** **அளவில் இன்பத்து ஐந்திணை மருங்கிற்**
**களவுகற்பு எனஇரு கைகோள் வழங்கும்**

**(தொல்.பொருள். 1)**

என்னும் நூற்பாவில், எல்லையில்லாத இன்பத்தையுடைய ஐந்திணை இடத்துக் களவும் கற்பும் என இரண்டு ஒழுக்கமும் நிகழும் என்பது விளக்கப்பட்டுள்ளது.

(3)

## 3. கூற்று

**கூற்று என்பது சொல்வதற்கு உரியவரைக் குறிக்கும். அகத்திணையில் யார்யார் பேசுகின்றார்களோ அவர்கள் எல்லோரும் கூற்று எனப்படுவர். அவர்களின் பேச்சின் வழியாகவே களவியல், கற்பியல் என்பவற்றின் பொருள் வெளிப்படும். களவில் கூற்றாக அமைபவர், கற்பில் கூற்றாக அமைபவர் எனக் கூற்றுக்கு உரியவர்கள் பகுக்கப்பட்டுள்ளனர்.**


இக்கூற்று பற்றிய பல்வேறு கூறுகள் இவ்வியலில் 213 முதல் 224 வரையுள்ள நூற்பாக்களில் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. அகத்திணையியலில் கூற்று பற்றிப் பொதுவாகச் சொல்லப்பட்டவை இங்குக் களவு, கற்பு அடிப்படையில் பகுத்து விளக்கப்பட்டுள்ளன.

### 3.1 களவில் கூற்றுக்கு உரியார் –6

213. தலைவன் தலைவி பார்ப்பான் பாங்கன்
பாங்கி செவிலி என்றீங்கு இவ்வறுவரும்
சாற்றிய களவில் கூற்றிற்கு உரியர்

தலைவன் முதலாகச் செவிலி ஈறாகச் சொல்லப்பட்ட அறுவரும் களவில் கூற்றுக்கு உரியார் ஆவர்.

**களவில் கூற்றுக்கு உரியார்**



### 3.2 கற்பில் கூற்றுக்கு உரியார் –13

214. நற்றாய் கண்டோர் பாணன் கூத்தர்
விறலி பரத்தை அறிவர் என்று எழுவரும்
அறுவர் என்று அவரும் ஆகிய அனைவரும்
குறைவறு கற்பில் கூற்றிற்கு உரியர்.

*1. நற்றாய்* *5.விறலி*
*2.கண்டோர்* *6.பரத்தை*
*3.பாணன்* *7.அறிவர்*
*4.கூத்தா*

என்னும் ஏழு பேரும் களவியலுக்குரிய,

*8.தலைவன்* *11.பாங்கன்*
*9.தலைவி* *12.பாங்கி*
*10.பார்ப்பான்* *13.செவிலி*

என்னும் அறுவருடன் பதின்மூன்று பேரும் அகத்திணையில் களவுக்கும் கற்புக்கும் உரிய கூற்றுகள் ஆவர்.

(5)

### 3.3 கூற்றிற்கு உரிமை இல்லாதார்

215. பயந்தோன் தன்னை உயங்குநோய் அறிவோர்
ஊரவர் அயலோர் சேரியோர் என்றிவர்
முகத்துரை நிகழா அகப்பொருள் அகத்தே

தலைவன், தலைவியைப் பெற்ற **1.தந்தை, 2.தமையன்மார், 3.அகமாந்தரின் இடர்களை அறிந்தோர், 4. ஊர்மக்கள், 5.அயலில் இருப்பவர், 6.சேரியில் வாழ்வோர்** என்னும் இவ்வறு வகையினரும் நேர் முகமாகக் கூற்றுக்கு உரிமை இல்லாதவர்கள்.

மேற் குறிப்பிட்ட அறுவரும் நேரடியாக இடம்பெற மாட்டார்கள். தலைவியின் களவொழுக்கம் பாங்கி, செவிலி, நற்றாய் வழியாகத் தலைவியின் தந்தை தமயன்மாருக்குத் தெரிந்ததும் சினந்து எழுவர். ஆனால் சினந்து எழுதுவது கூற்றாக - நேரடிப் பேச்சாக அக இலக்கியத்தில் வராது. இவர்களையே கூற்றுக்கு உரிமை இல்லாதவர் எனக் கூறிப்பர்.

(6)

### 3.4 தலைவன் கூற்றுக்கு ஒரு சிறப்புவிதி

216. தமர்வரின் இடைச்சுரம் தன்னில் கிழத்தியோடு
அமர்தரு கிழவோன் ஆணையும் கூறும்

தலைவியுடன் தலைவன் பாலை நிலத்தில் உடன்போக்குச் செல்லும்போது தலைவியின் சுற்றத்தார் தேடிப் பின்தொடர்ந்து வருவாராயின் தலைவியிடம் ஆணை (நீதி) கூறுவர்.

எனது இனிய காதலியே! உன்னைத் தேடிவரும் சுற்றத்தாரோடு சிறிது நேரம் மகிழ்ந்திருப்பாயாக!

**கடுஞ்செம் மூதாய்! கண்டுங் கொண்டும்**
**நீவிளை யாடுக சிறிதே**

(7)

## 3.5 தலைவி கூற்றுக்கு ஒரு சிறப்பு விதி

217. உடன்போய் மீண்ட கொடுங்குழை மடந்தை
பிரிவுழித் தலைவனொடு சுரத்தியல் பேசலும்
பிரிந்துழி நெஞ்சொடும் பிறரொடும் வருந்திச்
சொல்லலும் உரியள் சொல்லுங் காலை.

தலைவனோடு உடன்போக்குச் சென்று திரும்பி வந்த தலைவி, தலைவன் பிரியும்போது அவனிடம் பாலை நிலத்தின் வெம்மையையும் அங்கு வாழும் உயிரினங்களின் இயல்பையும் கூறுவாள். மேலும் தலைவனைப் பிரிந்திருக்கும் காலத்திலும் பாலை நிலத்தைப் பற்றித் தன் நெஞ்சத்திற்கும் கூறுவாள்.

இவ்வகையான கூற்று உடன்போக்குச் செல்லாத தலைவிக்கு இல்லை; அவளுக்குப் பாலை நிலம் பற்றிக் கூறும் அனுபவம் இருக்காது.

### 3.5.1 தலைவன் தலைவியைப் பிரியும் காலத்து அவனிடம் சுரத்தின் இயல்பு கூறுதல்

தலைவ! அன்றொரு நாள் சுரத்திடை வரும்போது நிழலுக்காக ஓமை மரத்தின் அடியில் தங்கி இருந்தோம். அப்போது ஓர் ஆண்யானை வந்து தழையை ஒடித்துத் தின்றது. திடீரென்று எதையோ கண்டதைப் போலத் துதிக்கையைத் தூக்கிப் பிளிறியது. ஆண்யானையின் பிளிறல் கேட்டுப் பெண்யானை ஏதோ நிகழ்ந்து விட்டது என்று பெருங் குரல் எடுத்துப் பிளிற அச்சத்தம் மலைப் பக்கம் முழுவதும் எதிரொலித்தது. அப்படிப்பட்ட கொடிய வழியில் நீயிர் பிரிந்து செல்ல நினைக்கலாமா?

**நினைத்தலும் நினைத்திரோ ஐய! அன்றுநாம்**
**பணைத்தாள் ஓமைப் படுசினை பயந்த**
**பொருந்தாப் புகர் நிழல் இருந்தெனமாக**
**நடுக்கம் செய்யாது நண்ணுவழித் தோன்றி**
**ஒடித்துமிசைக் கொண்ட ஓங்கு மருப்பு யானை**
**பொறிபடு தடக்கை சுருக்கி பிறிதுஓர்**
**ஆறு இடையிட்ட அளவைக்கு வேறுஉணர்ந்து**
**என்றூழ் விடர்அகம் சிலம்ப**
**புன்தலை மடப்பிடி புலம்பிய குரலே!** **(நற்.318)**

### 3.5.2. தலைவனைப் பிரிந்துழித் தலைவி சுரத்தின் இயல்பை நெஞ்சொடு கூறல்

வில்லைக் கையில் ஏந்திய வண்ணம் நம்மைப் பிரிந்த தலைவன் பாலை நிலத்துவழிச் செல்வார்.

வில்லுழவர் நாளுமறுகு புள்ளும் போவர் கொல்?

### 3.5.3 தலைவனைப் பிரிந்துழித் தலைவி பிறரிடம் சுரத்து இயல்பு கூறல்

பாங்கியே! நம்மைப் பிரிந்து செல்லும் தலைவன் செல்லும் வழியை நீ அறிய மாட்டாய்! தலைவனைப் போலவே அவர் செல்லும் வழியும் அச்சம் இல்லாதது. சிறிதும் அச்சமில்லாத சிறிய கண்களை உடைய யானைகள் அவ்வழியில் சுற்றித் திரியும்.

**அறியாய் தோழி அவர் சென்ற ஆறே!**
**தங்கண் கொண்கன் அன்ன**
**சிறுகண் யானை திரிதரு காடே** (8)

### 3.6 நற்றாய் கூற்று நிகழாத இடம்

218. **தலைவன் தலைவியொடு நற்றாய் கூறாள்.**

தலைவன், தலைவி ஆகிய இருவரொடும் நற்றாய் பேசுவது அகப்பொருள் மரபில் இல்லை.

தலைவனொடும் தலைவியொடும் நற்றாய் நேரடியாகக் கூற்று நிகழ்த்துதல் அகத்திணைக்கு இல்லை. (தொல்.பொருள்.503,504 பேரா.)

(9)

### 3.7 நற்றாய் கூற்று நிகழும் இடம் – 8

219. **புணர்ந்துஉடன் போயது உணர்ந்த பின்னர்**
**அந்தணர் தெய்வம் அயலோர் அறிவர்**
**சிந்தைநோய் அறிவோர் செவிலி பாங்கியொடு**
**கண்டோர்க்கு உரைக்கும் பண்புடை நற்றாய்.**

தலைவன் தலைவி இருவரும் களவொழுக்கக் காலத்து உடன் போக்குச் சென்றதை அறிந்தபின் எண்மருடன் நற்றாய் கூற்று நிகழ்த்துவாள்.

| | | |
|---|---|---|
| 1. அந்தணர் | 4. அறிவர் | 7. பாங்கி |
| 2. தெய்வம் | 5. சிந்தைநோய் அறிவோர் | 8. கண்டோர் |
| 3. அயலோர் | 6. செவிலி | |

(10)

### 3.8 செவிலி கூற்று நிகழும் இடம்

220. **தாயொடும் பாங்கி தான்முத லாரொடும்**
**சேயிழை செவிலியும் செப்பும் ஆங்கே.**

தலைவி, தலைவனுடன் உடன்போக்குச் சென்றதை அறிந்த செவிலி, நற்றாய், பாங்கி, முதலானோரோடு கூற்று நிகழ்த்துவாள்.

முதலார் என்போர் நற்றாய், பாங்கி தவிர்த்து அந்தணர், தெய்வம், அயலோர், அறிவர், சிந்தைநோய் அறிவோர், கண்டோர் ஆவர்.

(11)

## 3.9 கண்டோர் கூற்று நிகழும் இடம்

221. தாயர் பாங்கியர் தலைவன் தலைவியோடு
ஏயும் என்ப கண்டோர் கூற்றே.

உடன்போக்கு என்னும் களவு வாழ்விலும் கற்பு எனப்படும் இல்லற வாழ்விலும் காண்டோரின் கூற்று நற்றாய், செவிலித்தாய், பாங்கியர், தலைவன், தலைவியோடு நிகழும்.

**கண்டோர் செவிலியிடம் கூற்று நிகழ்த்துதல்**

மகளைத் தேடிவரும் செவிலித்தாயே! பெருமை மிக்க முத்து பிறர் அணிவதால் மட்டுமே தானும் அழகைப்பெற்று அணிந்தவரையும் அழகுபடுத்தும். கடலில் பிறந்தாலும் அதற்கு எந்த நன்மையும் இல்லை. அம்முத்தைப் போன்றுதான் நும்மகளும் அவள் புகுந்த வீட்டிற்கும் போகும்போதே பெருமை அடைவாள்.

**சீர்கெழுவெண் முத்தம் அணிபவர்க்கு அல்லதை**
**நீடுளே பிறப்பினும் நீர்க்கு அவைதாம் என் செய்யும்?**
**தேருங்கால் நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே** *(கலித்.9)*

(12)

## 3.10 விதந்து சொல்லப்படாதாரின் கூற்று நிகழும் திறம்

222. சாற்றா எழுவரும் தலைவன் தலைவியோடு
ஏற்றன கூறுப இடந்தொறும் இடந்தொறும்.

சொல்லப்படாத பார்ப்பானும் பாங்கனும் பாணனும் கூத்தரும் விறலியரும் பரத்தையரும் அறிவரும் என இவர் எழுவரும் தலைமகனோடும் தலைமகளோடும் இடந்தொறும் இடந்தொறும் பொருந்தியவற்றைக் கூறுவர்.

(13)

## 3.11 தலைவி கூற்றுக்குப் புறனடை

223. நெஞ்சும் நாணும் நிறைசேர் அறிவும்
செஞ்சுடர்ப் பரிதியும் திங்களும் மாலையும்
புள்ளும் மாவும் புணரியும் கானலும்
உள்ளுறுத்து இயன்றவும் ஒழிந்தவை பிறவும்
தன்சொல் கேட்குந போலவும் தனக்குஅவை
இன்சொல் சொல்லுந போலவும் ஏவல்
செய்குந போலவும் தேற்றுந போலவும்
மொய்குழல் கிழத்தி மொழிந்தாங்கு அமையும்.

தலைவி பிறருடன் கூற்று நிகழ்த்துவதோடு மட்டுமல்லாமல் தனித்துக் கூற்று நிகழ்த்தும் இடமும் உண்டு.

தலைவனைப் பிரிந்து வருந்தும் தலைவி,

| | | | |
|---|---|---|---|
| 1. நெஞ்சு | 4. சூரியன் | 7. பறவை | 10. கானம் |
| 2. நாணம் | 5. நிலவு | 8. விலங்கு | |
| 3. அறிவு | 6. மாலைப்பொழுது | 9. கடல் | |

எனச் சொல்லப்பட்டவற்றோடும் பிறவற்றோடும் தனக்குத் தானே பேசுவாள்.

1. தன் சொல் கேட்கின்றன போலவும்
2. தனக்கு அவை இன்சொல் சொல்லுகின்றன போலவும்
3. ஏவல் செய்குந போலவும்
4. தன்னைத் தேற்றுகின்றன போலவும்

எனச் சொல்லித் தலைவி தலைவனின் பிரிவாற்றாமையை ஆற்றிக் கொள்வாள்.

**1. தலைவி நெஞ்சொடு கூற்று நிகழ்த்துதல்**

பிரிந்து சென்ற தலைவரை நாடிச் செல்லும் என் நெஞ்சமே! நீ செல்லும்போது கண்ணையும் உடன் அழைத்துச் செல்வாயாக. தலைவனைக் காண வேண்டுமென்று அவை என்னைக் குதறித் தின்கின்றன.

**கண்ணும் கொளச்சேறி நெஞ்சே! இவை என்னைத்**
**தின்னும் அவர்க் காணல் உற்று** (திருக்.1244)

**2. தலைவி மாலைப்பொழுதோடு கூற்று நிகழ்த்துதல்**

மாலைப்பொழுதே! நீயும் ஏன் மயங்கி அல்லற்படுகின்றாய்? என் காதலரைப் போலவே நின் துணையும் வன்மை உடையதோ?

**புன்கண்ணை வாழி மருண்மாலை! என்கேள்போல்**
**வன் கண்ணதோ நின்துணை?** (திருக்.1222)

(14)

## 3.12 எல்லார் கூற்றிற்கும் புறனடை

224. **இறையோன் முதலோர் யாரொடும் இன்றித்**
**தம்மொடு தாமே சாற்றியும் அமைப.**

| | | | |
|---|---|---|---|
| 1.தலைவன் | 5.பாங்கி | 9.பாணன் | 13.அறிவர் |
| 2.தலைவி | 6.செவிலி | 10.கூத்தர் | |
| 3. பார்ப்பான் | 7. நற்றாய் | 11. விறலி | |
| 4. பாங்கன் | 8. கண்டோர் | 12. பரத்தை | |

என்னும் இப்பதின்மூவரும் பிறரோடு கூற்று நிகழ்த்துவதோடு மட்டும் அல்லாமல் தம்மொடு தாமேயும் (நெஞ்சுக்குள்) கூற்று நிகழ்த்துவர்.

(15)

## 4. கேட்போர்

**தலைவன் கூற்றையும் தலைவி கூற்றையும் பார்ப்பான், பாங்கன், தோழி, செவிலி, பாணன், கூத்தன், விறலி, பரத்தை, அறிவர், கண்டோர் என்ற பதின்மரும் கேட்பர்.**

**(தொல்.பொருள்.508 பேரா.)**

தலைவன், தலைவியோடு நற்றாய் கூற்று மட்டும் அகப்பொருளில் நிகழ்வதில்லை.

கேட்போர் கூற்றுப் பின்வருமாறு இரண்டு நிலைகளில் அமையும்.

### 4.1 கிழவன் கூற்றும் கிழத்தி கூற்றும் கேட்போர்

225. **கிழவோன் கூற்றும் கிழத்தி கூற்றும்**
**பழமறை யோன்முதல் பதின்மரும் கேட்ப.**

தலைவன் கூற்றையும் தலைவியின் கூற்றையும் கேட்பவர்கள் பத்து மாந்தர்கள் ஆவர்.

1. பார்ப்பான்
2. பாங்கன்
3. பாங்கி
4. செவிலி
5. கண்டோர்
6. பாணன்
7. கூத்தர்
8. விறலி
9. பரத்தை
10. அறிவர்

நற்றாய் தலைவன், தலைவியோடு நோடியாகக் கூற்று நிகழ்த்துவது இல்லை. (16)

### 4.2 மறையோன் கூற்றும் அறிவர் கூற்றும்

226. **மறையோன் கூற்றும் அறிவர் கூற்றும்**
**இறையோன் முதலா எனைவரும் கேட்ப.**

பார்ப்பனர், அறிவர் என்பவருடைய கூற்றைத் தலைவன் முதலாக அனைவரும் கேட்பர்.

1. தலைவன்
2. தலைவி
3. பாங்கன்
4. பாங்கி
5. செவிலி
6. கண்டோர்
7. பாணன்
8. கூத்தர்
9. விறலி
10. நற்றாய்
11. பரத்தை

(17)

## 5. இடம் (இடன்)


**இடனாவது அகஇடனும் புறஇடனும் என இருவகைப்படும். அகஇடனாவது மனையும் வளாகமும் பற்றி வருவது; புற இடனாவது மலையும் பழனமும் சோலையும் கடலும் நெறியும் ஆறும் பற்றி வருவது**

**(தொல்.பொருள்.513.பேரா.)**

இடம் இன்னது என்பது

227. நெறிப்படு கருமம் நிகழ்வுழி இடமே.

முறையான காரியம் நிகழும் நிலம், இடம் எனக் கூறப்படும் உறுப்பாகும். மேலும் தன்னைக் குறிக்கக்கூடிய தன்மையும் (*First person*) முன்னின்றாரைக் குறிக்கக் கூடிய முன்னிலையும் (*Second person*) படர்க்கையில் வரும் உயர்திணை (ஆண்பால், பெண்பால், பலர்பால்) என்பதும் அஃறிணை (ஒன்றன் பால், பலவின்பால்) என்பதும் (*Third person*) இடம் எனப்படும்.




(18)

**6. காலம்**


**இறப்பாவது தொழிலது கழிவு; நிகழ்வாவது தொழில் தொடங்கி முற்றுப் பெறாமல் நடக்கின்ற நிலைமை; எதிர்வாவது தொழில் பிறவாமை**

**(தொல்.சொல்.202, நச்சர்)**

**காலம் இன்னவை என்பது**

228. சென்றதும் நிகழ்வதும் எதிர்வதும் எனமுறை
நின்று பொருளுணர நிகழ்வது காலம்

சென்றது என்பதை உணர்த்தும் இறந்த காலமும் நிகழ்வது என்பதை உணர்த்தும் நிகழ்காலமும் எதிர்வது என்பதை உணர்த்தும் எதிர்காலமும் உலகிலுள்ள பொருளை அறியும் படியாக நடப்பது காலம் என்னும் உறுப்பாகும்.




(19)

**7. பயன்**

**பயன் இன்னது என்பது**

229. இப்பொருள் பயக்கும்இஃது என்பது பயனே.

இப்பொருளை இது அளிக்கும் என்று சொல்லுவது பயன் என்னும் உறுப்பு ஆகும்.

(20)

**8. முன்னம்**

**முன்னம் இன்னது என்பது**

230. **இன்னார்க்கு இன்னுழி இன்னது பயக்கும்எனும்
முன்னம் தருவது முன்னம் ஆகும்.**

இத்தன்மையர்க்கு இவ்விடத்து இன்னது தரும் என்னும் குறிப்பினை வெளிப்படுத்துவது முன்னம் என்னும் உறுப்பு ஆகும்.

(21)

**9. மெய்ப்பாடு**

**மெய்ப்பாடு இன்னவை என்பது**

231. **நகை முதலாம் இருநான்கு மெய்ப்பாடும்
நிகழ்பொருள் மெய்ப்பட நிற்ப மெய்ப்பாடே.**

நகை முதலாகச் சொல்லப்பட்ட எட்டு உறுப்புகளும் உடலில் தோன்றும் உணர்வுகளின் வெளிப்பாடு ஆகும்.

*1. நகை* *3. இளிவரல்* *5. அச்சம்* *7.வெகுளி*

*2. அழுகை* *4. மருட்கை* *6. பெருமிதம்* *8. உவகை*

**நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று
அப்பால் எட்டாம் மெய்ப்பாடு என்ப**

*(தொல்.பொருள்.247)*

(22)

**10. எச்சம்**

**எஞ்சி நிற்பது; ஒருபொருளை உடைய சொல். எனவே, எச்சச் சொல் என்று பெயர் ஆயிற்று.**

(தொல்.சொல்.430, உரை)

சொல் வந்து நிற்பது ஒருவகை எச்சம். **வந்து சென்றான்** என்னும்போது **வந்து** என்னும் சொல்லே தொடரில் வந்து நிற்பது ஒருவகை. இன்னொன்று குறிப்பால் பொருள் எஞ்சி நிற்கும். **வயிறு மொடு மொடுத்தது** என்றால் உணவு வேண்டாம் என்னும் குறிப்புப் பொருளை உணர்த்தும்.

**எச்சம் இன்னது என்பது**

232. **சொல்லே ஆயினும் குறிப்பே ஆயினும்
சொல்லி முடித்தல் வேண்டுவது எச்சம்.**

ஒரு சொல்லோ அல்லது குறிப்போ தொடரில் வந்து பொருள் முடிக்க நிற்பது எச்சம் என்னும் உறுப்பு ஆகும்.

(23)

## 11. பொருள்கோள்

### பொருள் வகை இன்னது என்பது

233. ஒருதிணைக்கு உரிமை பூணா நிலைமை
பொருள்வகை என்மனார் புலமை யோரே.

அகப்பொருளில் இப்பொருள் இத்திணைக்கு உரியது என்னும் வரையறை இருப்பினும் அவ்வரையறை இல்லாது எல்லாப் பொருளும் எல்லாத் திணைக்கும் உரியவை என்பதை உணர்த்துவது பொருள் வகை என்னும் உறுப்பு ஆகும்.

1. நிரனிறை மொழிமாற்று
2. சுண்ணை மொழிமாற்று
3. அடிமறி மொழிமாற்று
4. அடிமொழி மாற்று
5. பூட்டுவிற் பொருள்கோள்
6. புனல்யாற்றுப் பொருள்கோள்
7. தாப்பிசைப் பொருள்கோள்
8. அளைமறியாப்புப் பொருள்கோள்
9. கொண்டு கூட்டுப் பொருள்கோள்

(24)

## 12. துறை

புலவர், கூறுவோரும் கேட்போரும் இல்லாமல் தாமே படைத்துக் கொண்டு கூறுவது துறை எனப்படும்.

### துறை இன்னது என்பது

234. சொல்லிய அல்ல ஒன்றினும் அவற்றொடு
ஒல்லும் வகைதேர்ந்து உணர்த்தியல் வழாமல்
உரைப்போர் கேட்போர் உண்மை இன்றி
உரைக்கும் கவியே உரைப்பது துறையே.

அகப்பொருளில் சொல்லப்பட்டுள்ள மக்கள், மாக்கள் எனப்படும் உயிரினங்கள் மட்டுமின்றிக் கூறப்படாதவை ஒன்றி வருமாயினும் அவற்றையும் இலக்கண வழுவில்லாதபடி அமைத்துக் கொள்ளலாம்.

மேலும் தன்னையன்றி உரைக்கக் கூடியவரும் கேட்கக் கூடியவரும் இல்லாமல் கவிஞர் தாமே அமைத்துக் கொண்டு கூறுவது துறை என்னும் உறுப்பு ஆகும்.

குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்னும் ஐந்து திணைகளுக்கும் அகப்பொருள் விளக்கத்திற்கு இலக்கியமாக அமைந்துள்ள தஞ்சைவாணன் கோவையிலிருந்து சான்றுகள் கொடுக்கப்படுகின்றன. இவற்றில் தன்னையன்றி உரைப்போரும் கேட்போருமின்றித் துறை அமைந்திருப்பதைக் காணலாம்.

## 12.1 குறிஞ்சித்திணை (தலைவன் நெஞ்சொடு கிளத்தல்)

உழையும் வெங்காளமும் போலும் கண்ணாள் ஒருகாலம் உள்ளம்
குழையும் எம்பால் என்று கொண்ட நெஞ்சே! கலிக்கோடை
மண்மேல்
மழையும் மந்தாரமும் வந்தன வாணன் தென்மாறையின் மாந்
தழையும் நம்போல் இங்ஙனே கவின்வாடத் தவம்செய்ததே
(தஞ்.கோ.99)

மான் போலவும் நஞ்சைப் போலவும் கண்களை உடையவள்; யாம் இரந்து பின்னின்றால் ஒருவேளை இரங்குவாள் என எண்ணும் நெஞ்சே! கடுங்கோடை சூழ்ந்த மண்ணுலகில் மாமரம் தன் தழைவாடத் தவம் செய்தது. நாமும் இனி என்செய்வோம்?

| குறிஞ்சி : அகப்பாடல் உறுப்புகள் | | |
|---|---|---|
| 1. | திணை | குறிஞ்சி |
| 2. | கைகோள் | களவு |
| 3. | கூற்று | தலைவன் |
| 4. | கேட்போர் | நெஞ்சு |
| 5. | இடம் | தனிஇடம் - முன்னிலை |
| 6. | காலம் | இறந்த காலம் |
| 7. | பயன் | குறை நேர்தல் |
| 8. | முன்னம் | இவ்விடத்து எனக்கு இது தகும் |
| 9. | மெய்ப்பாடு | மருட்கை |
| 10. | எச்சம் | ‘இனி என் செய்வோம்’ என்னும் சொல்லெச்சம் |
| 11. | பொருள்கோள் | புனல்யாற்றுப் பொருள்கோள் |

## உவம வகைகள்

237. உள்ளுறை உவமம் வெளிப்படை உவமம் என
எள்ளரும் உவமம் இருவகை உடைத்தே.

**உள்ளுறை உவமம், வெளிப்படை உவமம்** என இருவகையில் அகப்பாடல்களில் உவமம் அமைந்து வரும். (28)

## 1. உள்ளுறை உவமத்தின் இலக்கணம்

238. அவற்றுள்,
உள்ளுறை உவமம் உய்த்துணர் வகைத்தாய்ப்
புள்ளொடும் விலங்கொடும் பிறவொடும் புலப்படும்.

உள்ளுறை உவமம் என்பது உய்த்துணர்ந்து கொள்ளும் வகையில் பறவை, விலங்கு போன்றவற்றோடும் பிறவற்றோடும் மிகவும் நுட்பமாக அமைக்கப்பட்டிருக்கும்.

**இழை விளையாடும் இளமுலை சாயற் கிடைந்த மஞ்ஞை**
**கழை விளையாடும் கடிப்புனங் காத்தும் கலையகலா**
**துழை விளையாடும் உயர்சிலம் பாவின்னு முன்பொருட்டால்**
**மழை விளையாடும் மதிற் தஞ்சை வாணன் மலயத்திலே**

**(தஞ்.கோ.238)**

பெண் மானைப் பிரியாது கலைமானாகிய ஆண் மான் விளையாடுவதைப் போலத் தலைவியைப் பிரியாது நீ அவளுடன் விளையாட வேண்டும் என்பது உள்ளுறை உவமப் பொருளாகும். (29)

## 2. வெளிப்படை உவமத்தின் இலக்கணம்

239. வெளிப்படை உவமம் வினைபயன் மெய்உரு
வெளிப்பட நின்று விளங்குவ தாகும்.

தொழில் (வினை), பயன், வடிவம், நிறம் என்னும் நான்கு அடிப்படையில் தெளிவாகப் பொருள் விளங்குமாறு வருவது வெளிப்படை உவமம் ஆகும். (30)

## அ.2 இறைச்சிப் பொருள்

**ஓர் உட்கருத்தை உள்ளடக்கிப் பேசும் முறையில் ஒன்று இறைச்சி என்பது. இறைச்சியாவது ஒரு நிலத்தின் கருப்பொருளைக் கொண்டு தாம் வெளிப்படையாக ஒரு செய்தியைக் கூறியபின், அதனை ஒட்டியே வேறு ஒரு செய்தியையும் அறிவித்தல்.**

**(தொல்.பொருள்.229. நச்சர்)**

## இறைச்சிப் பொருளின் இலக்கணம்

240. கருப்பொருள் பிறக்கும் இறைச்சிப் பொருளே.

இறைச்சிப் பொருள் என்பது ஐந்திணைக்கும் உரிய தெய்வம் முதலாகிய கருப்பொருளிலிருந்து பிறப்பதாகும்.

தலைவன், நம்மைக் கைவிட மாட்டேன் என்று சொன்ன சூளுரையில் தவறிவிட்டான். இருந்தும் அவன் மலை அருவியைப் பெற்றுள்ளது; மழை பெய்வதால் அருவி கொட்டுகின்றது.

**இலங்கும் அருவித்தே; இலங்கும் அருவித்தே;**
**வானின் இலங்கும் அருவித்தே - தான் உற்ற**
**சூள் பேணான் பொய்த்தான் மலை** **(கலித்.41)**

அறம் தவறும் தலைவன் ஆட்சி புரியும் நாட்டில் மழை பெய்யாது நாடு வறண்டு போகும்; ஆனால் இத்தலைவன் நாட்டில் மழை பெய்து அருவி கொட்டுகிறது. எனவே தலைவன் உண்மையில் நல்லவன்; நம்மை ஒருபோதும் பிரியமாட்டான். சூழல் அவனைச் சொல் தவறியவன் ஆக்கி விட்டது எனக் கருப்பொருள் வழி இறைச்சிப் பொருள் வெளிப்படுகிறது. (31)

### அகப்புறக் கைக்கிளை என்பது

241. **காமஞ் சாலா இளமை யோள்வயின்**
**குறிப்பறி வுறாது குறுகியாங்கு அவளோடு**
**இறப்பக் கூறுவது அகப்புறக் கைக்கிளை.**

காம உணர்வு தோன்றாத இளமைத் தன்மையுடைய தலைவியை அவளின் இயல்பையும் உள்ளக் குறிப்பையும் அறியாது தன் காம உணர்வை வெளிப்படுத்துவது அகப்புறக் கைக்கிளை எனப்படும்.

மயக்கம் கொண்டவனைப் போல மற்றவர் காம நோய் பற்றித் தெரியாமல், கேட்பதற்கு எதுவும் பேசாமல் போகின்றவனே! யான் சொல்வதைக் கேள்! உன்மீதும் தவறில்லை; நின்னை வெளியில் வரவிட்ட நின் பெற்றோரும் சுற்றத்தவரும் தவறிலர். யானையை நீர்த்துறைக்குக் கொண்டு செல்லும்போது அதன் வருகையை எச்சரிக்கப் பறை அறைந்து கூறுவர். அதுபோல நின் வரவைப் பறை சாற்றி அறிவிக்காத மன்னவனே தவறுடையவன்.

**பேதுற்றாய் போலப் பிறர் எவ்வம்நீ அறியாய்**
**யாதொன்றும் வாய்வாளாது இறந்தீவாய்! கேளினி**
**நீயும் தவறிலை நின்னைப் புறங்கடைப்**
**போதர விட்ட நுமரும் தவறிலர்**
**நிறையழி கொல்யானை நீர்க்கு விட்டாங்குப்**
**பறையறைந்து அல்லது செல்லற்க! என்னா** *(கலித்.56)*
**இறையே தவறுடையான்.** (32)

### அகப்புறக் கைக்கிளைக்கு உரியவர்

242. **அதுவே,**
**இறைமை இல்லோர்க்கும் இழிகுலத் தோர்க்கும்**
**முறைமையின் உரைத்தே முன்னுங் காலை.**

தலைமைப் பண்பு இல்லாதோரும் இழிகுலத்தைச் சார்ந்தோரும் அகப்புறக் கைக்கிளைக்கு உரியோர் ஆவர்.

**1. தலைமை! பண்பு இல்லாதோர்**

இவன் ஒரு நாணம் அற்றவன்; அவனோடு புணர்ச்சிக்கு விருப்பம் இல்லாதவரையும் தன் விருப்பத்திற்கு வலிந்து கைப்பிடித்துத் தழுவியவன்.

**ஏஎ! இஃது ஒத்தன் நாணிலன் - தன்னொடு**
**மேவேம் என்பாரையும் மேவினன் கைப்பற்றும்** *(கலித்.62)*

**2. இழிகுலத்தைச் சார்ந்தோர்**

அக ஒழுக்க முறையை அறியாத குறுகிய மூடனே! கடும் பகல் நேரத்தில் வந்து மெய்தொட்டு இல்லத்திற்கு அழைக்கும் உனக்குத் தாய், உடன்பிறந்தோர், மனைவி உள்ளனரா? கூறுவாயாக!

கல்லா குறள! கடும்பகல் வந்து எம்மை
இல்லத்து வா என மெய் கொளீஇ எல்லா! நின்
பெண்டிர் உளர் மன்னோ கூறு. (33)

## இ. அகப்பொருள் பெருந்திணை

அகன் ஐந்திணைக்குரிய செய்திகளின் இடையிடையே அளவிறந்த காமத்தால் அவ்வைந்திணை ஒழுக்கத்துக்குப் பொருந்தாதனவற்றைச் செய்தல் அகப்பொருள் பெருந்திணை எனப்படும்.

### அகப்பொருள் பெருந்திணை என்பது

243. அகன்றுழிக் கலங்கலும் புகன்றமடற் கூற்றும்
குறியிடை யீடும் தெளிவிடை விலங்கலும்
வெறிகோள் வகையும் விழைந்துஉடன் போக்கும்
பூப்பியல் உரைத்தலும் பொய்ச்சூள் உரையும்
தீர்ப்பில் ஊடலும் போக்கழுங்கு இயல்பும்
பாசறைப் புலம்பலும் பருவமாறு படுதலும்
வன்புறை எதிர்ந்து மொழிதலும் அன்புறு
மனைவியும் தானும் வனம்அடைந்து நோற்றலும்
பிறவும் அகப்பொருள் பெருந்திணைக்கு உரிய.

என்னும் பதினான்கு கூறுகளும் அகப்பொருள் பெருந்திணை உணர்த்தும் செய்திகள் ஆகும்.

**1. அகன்றுழிக் கலங்கல்:** தலைவி ஊடல் கொண்டும் வேறுவகையிலும் அகன்று செல்லும் போது தலைவன் பெரிதும் வருந்துதல்.

**2. புகன்ற மடற் கூற்று:** தலைவியை அடையத் தடங்கல் ஏற்பட்டால் மடலேறுதல் பற்றிக் கூறுதல்.

**3. குறி இடையீடு :** குறியிடம் குறித்து வைத்துள்ள தலைவன், தலைவிக்கு அங்குச் செல்ல இடையூறு உண்டாதல்.

**4. தெளிவிடை விலங்கல் :** எதுவும் நிகழாது என்று தெளிந்த போதும் ஐயத்துடன் விலகிப் போதல்.

**5. வெறிகோள் வகை :** மாற்றத்திற்கான காரணத்தை அறிய வெறியாடலை மேற்கொள்ளுதல்.

**6. விழைந்து உடன்போக்கு :** மணந்து கொள்ளுவதில் தடை ஏற்படுமோ என்று நினைந்து உடன்போக்குப் போதல்.

**7. பூப்பியல் உரைத்தல் :** பூப்படைந்ததைத் தலைவனுக்குத் தலைவி எடுத்துக் கூறுதல்.

**8. பொய்ச்சூள் உரை:** தலைவன் பொய்யான சூளுரைகளைக் கூறித் தலைவியை ஏமாற்றுதல்.

**9. தீர்ப்பில் ஊடல்:** தீர்வுகாண முடியாத அளவில் தலைவனும் தலைவியும் ஊடல் கொள்ளுதல்.

**10. போக்கழுங்கு இயல்பு :** கற்புக் காலத்தில் தலைவியைப் பிரிந்து செல்ல நினைக்கும் தலைவன் தலைவியின் நிலைகண்டு செலவைத் தள்ளிப்போடுதல்.

**11. பாசறை புலம்பல் :** போர் மேற்கொண்டு சென்ற தலைவன் பாசறையில் தலைவியின் நிலையை எண்ணிப் புலம்புதல்.

**12. பருவ மாறுபடுதல் :** கூறிச் சென்ற பருவம் மாறிய நிலையைத் தலைவனும் தலைவியும் எண்ணிப் பார்த்தல்.

**13. வன்புறை எதிர்ந்து மொழிதல்:** வற்புறுத்திக் கூறும் பாங்கியின் பேச்சைத் தலைவி மறுத்து உரைத்தல்.

**14. அன்புறு மனைவியும் தானும் வனம் அடைந்து நோற்றல் :** களவில் தொடங்கிக் கற்பு வரை இல்லறத்தை இனிதாக நடத்திய தலைவனும் தலைவியும் வனம் சென்று தவ வாழ்வை மேற்கொள்ளுதல்.

(34)

## ஈ. அகப்புறப் பெருந்திணை

**அகப்பொருளாகிய ஐந்திணை ஒழுக்கத்திடையே நிகழும் பொருந்தாக் காமச் செய்திகள் ஆகிய மடலேறுதல் முதலானவை தலைவன், தலைவியர் இயற்பெயர் சுட்டப்படாமல் அமைந்திருப்பின் அகப்புறப் பெருந்திணையாம். (இயற்பெயர் சுட்டப்படின் புறத்திணை ஆகிவிடும்.)**

### அகப்புறப் பெருந்திணை என்பது

244. மடல் ஏறுதலோடு விடைதழால் என்றா
குற்றிசை தன்னொடு குறுங்கலி என்றா
சுரநடை தன்னொடு முதுபாலை என்றா
தாபத நிலையொடு தபுதாரநிலை எனப்
புகன்றவை இயற்பெயர் பொருந்தா வாயின்
அகன்ற அகப்புறப் பெருந்திணைக்கு ஆகும்.

மேலே குறிக்கப்பட்ட,

| | |
|---|---|
| *1.மடல் ஏறுதல்* | *5. சுரநடை* |
| *2. விடை(ஏறு) தழால்* | *6.முதுபாலை* |
| *3. குற்றிசை* | *7.தாபத நிலை* |
| *4. குறுங்கலி* | *8. தபுதாரநிலை* |

என்னும் எட்டுக் கூறுகளும் அகப்புறப் பெருந்திணை சார்ந்தவை ஆகும்.

**1. மடல் ஏறுதல்**

தன் குறை தீரப் பெறாத தலைவன் பனங்கருக்கால் குதிரை செய்து, தன் உடம்பு முழுவதும் நீறு பூசிக் கொண்டு, பூளைப்பூ, எலும்பு, எருக்கம்பூ ஆகிய இவற்றை மாலையாகக் கட்டி அணிந்து கொண்டு அக்குதிரைமீது அமர்ந்து அதனைச் சிலர் வீதியில் இழுத்துச் செல்ல வீதியில் செல்லுதல்.. இது தலைவியை முறையாக அடையாமல் தன் காம மிகுதியை ஊரறியப் புலப்படுத்தி வரைய முயலுதலின் அகப்புறப் பெருந்திணை ஆயிற்று.

சான்றோர்களே! அரசன் தவம் செய்யத் தவறின் அதனைச் செய்வித்து தவர்க்கும் செல்ல அவனுக்கு அருள் புரிவது போல் என் காதலியை அடைய ஏற்படும் தடையை நீக்குமாறு கேட்கின்றேன் (இல்லையெனில்) மடல் ஏறுவது தவிர வேறு வழியில்லை.

**அறிந்தனிர் ஆயின் சான்றீர் தான்தவம்**
**ஒரீஇத் துறக்கத்தின் வழீஇ ஆன்றோர்**
**உள்இடப்பட்ட அரசனைப் பெயர்த்து, அவர்**
**உயர்நிலை உலகம் உறீஇயாங்கு என்**
**துயர்நிலை தீர்த்தல் நும்தலைக் கடனே.** *(கலித்.139)*

**2. விடை தழால்**

**வெல்லும் திறம் படைத்த தலைவன் தான் விரும்பிய தலைவியை மணம் செய்து கொள்ள வேண்டித் தலைவி தமர் குறிப்பிட்டுச் சொல்லும் திறமுடைய ஓர் எருதினைப் பிடித்து அடக்குதல்.**

கொலைத் தன்மை மிக்க எருதுகள் பாய்ந்து வந்தன. அவற்றைப் பலர் தழுவ முட்டி மோதி விழுந்தனர்.

ஒருவன் மட்டும் தன் தோளால் எருதின் கழுத்தை இறுகப் பற்றினான். அதன் திமிலைப் பிடித்து வருத்தினான்,

**அவருள் மலர்மலி புகழ் எழ அலர்மலி மணிபுரை நிமிர்**
**தோள்பிணைஇ**
**எருத்தோடு இமிலிடைத் தோன்றினன்! தோன்றி**
**வருத்தினான் மன்ற அவ்ஏறு.** *(கலித்.102)*

(35)

## உ. அகப்பாட்டினுள் பாடப்படுவோர்

245. பாட்டுடைத் தலைவன் கிளவித் தலைவன் எனப்
பாட்டினுள் பாடப்படுவோர் இருவர்.

அகப்பாட்டினுள் பாடப்படுவோர் பாட்டுடைத் தலைவன், கிளவித் தலைவன் என இருவர் ஆவர்.

**1. பாட்டுடைத் தலைவன்**

அகவாழ்வில் பாராட்டும் வகையிலும் போற்றிப் புகழும் வகையிலும் விளங்குபவன் பாட்டுடைத் தலைவன் ஆவான்.

**2. கிளவித் தலைவன்**

பாட்டுடைத் தலைவனைப் போலச் சிறப்பில்லாமல் படைக்கப்பட்ட தலைவன்.

(36)

## 1. அகப்பாட்டின்கண் பாடப்படுவோருள் உயர்த்தோன்

246. அவருள்,
உயர்ந்தோன் பாட்டுடைத் தலைவன் ஆகும்.

மேற் சொல்லப்பட்ட பாட்டுடைத் தலைவன், கிளவித் தலைவன் என்னும் இருவருள் பாட்டுடைத் தலைவனே உயர்ந்தோனாகக் கருதப்படுவான்.

உறையினின்று எடுக்கப்பட்ட வாள் மீண்டும் உறையுள் புகாத அளவிற்குப் போர்புரியும் வாளினையும் வலிய தோளினையும் இரவில் அயர்ந்து தூங்கும் சேனையினையும் மிக்க சினத்தையும் கொண்ட வேந்தன் பாசறையின் கண் உள்ளோம்

**கழித்துஉறை செறியா வாளுடை எறுழ்த்தோள்**
**இரவுத்துயில் மடிந்த தானை**
**உரவுச்சின வேந்தன் பாசறையேமே** ***(அகம்.24)***

பாட்டுடைத் தலைவனின் பெருமை இப்பாடல் அடிகளில் பேசப்படுகின்றது.

(37)

## 2. அகப்பாட்டுத் தலைமக்களுக்குக் கூறப்படும் பெயர்கள்

**247. நிலப்பெயர் வினைப்பெயர் பண்புகொள் பெயரொடு**
**குலப்பெயர் இயற்பெயர் கூறுப அவர்க்கே.**

அகப்பாட்டுக்குரிய பாட்டுடைத் தலைவன், கிளவித் தலைவன் ஆகிய இருவருக்கும் நிலம், வினை, பண்பு, குலம், இயற்பெயர் என்னும் ஐந்து வகையில் சூட்டப்படும்.

**1. நிலப்பெயர் :** வாழக் கூடிய இடமாகிய நிலத்தின் அடிப்படையில் இடப்படும் பெயர்கள்.

**மலையன், வெற்பன், துறைவன், ஊரன், நாடன், சேர்ப்பன்**

**2. வினைப் பெயர்:** செய்யும் தொழிலாலும் செயலின் சிறப்பாலும் பெற்ற பெயர்கள்

**கோவலன், வேட்டுவன்; கடம்பெறிந்தான், தூங்கெயில் எறிந்தான், வடிவம் பலம் நின்றான்**

**3. பண்புகொள் பெயர்:** தனிப்பட்ட பொதுப் பண்புகள் அடிப்படையில் அமைந்த பெயர்கள்.

**நெடுஞ்சேரலாதன், இளஞ்சேட் சென்னி, பெருவழுதி, தோன்றல், அண்ணல்**

**4. குலப்பெயர்:** வாழும் இனம் சார்ந்து வழங்கும் பெயர்கள்

**சேரன், சோழன், பாண்டியன்; ஆயன், குறவன்**

**5. இயற்பெயர்:** பெற்றோரால் இடப்படும் பெயர்கள்

**பாரி, பேகன், ஓரி** (38)

## 3. கிளவித் தலைவனுக்குக் கூறப்படாத பெயர்

**248. அவற்றுள்.**
**இயற்பெயர் கிளவித் தலைவற்கு இசையார்.**

மேற் கூறப்பட்ட ஐவகைப் பெயர்களில் கிளவித்தலைவனுக்குப் பெற்றோரால் இடப்படும் பெயரைப் புலவர்கள் பயன்படுத்த மாட்டார்கள் (39)

## 4. அகப்பாட்டினுள் தலைமக்கள் வரும் திறம்

**249. இருவரும் ஒருங்கே வருதலும் தனித்தனி**
**வருதலும் இருவரும் வாராது ஒழிதலும்**
**உரிய என்மனார் உணர்ந்திசி னோரே.**

பாட்டுடைத் தலைவனும் கிளவித் தலைவனும் சேர்ந்து வருதலும் பாட்டுடைத் தலைமகனே வருதலும் கிளவித் தலைவனே வருதலும் அவ்விருவரும் வாராது ஒழிதலும் என இவ்விருவரின் வருகை அகப்பாட்டினுள் அமையும்.

**1. இருவரும் சேர்ந்து வருதல்**

பரத்தையர்ப் பிரிவு தொடர்பாக, வரும் பாடலில் ஊரன் என்னும் கிளவிப் பெயரும் அஞ்சி (அதியமான், நெடுமான் அஞ்சி) என்னும் பாட்டுடைத் தலைவன் பெயரும் வந்துள்ளன.

***அரில்பவர்ப் பிரம்பின் வரிப்புற விளைகனி***
***குண்டுநீர் இலஞ்சிக் கொண்டை கதூஉம்***
***தண்துறை ஊரன் பெண்டினை ஆயின்***
***பல ஆகுகநின் நெஞ்சின் படரே!***
***ஓவாது ஈயும் மாரி வண்கை***
***கடும்பகட்டு யானை நெடுந்தேர் அஞ்சி***
***கொன்முனை இரவூர் போலச்***
***சில ஆகுகநீ துஞ்சும் நாளே*** *(குறுந்.61)*

**2. பாட்டுடைத் தலைவன் மட்டும் வருதல்**

பின்வரும் பாடலின் பாட்டுடைத் தலைவன் பெயர் சோழர் என வந்துள்ளது.

***பகல்கொள் விளக்கொடு இராநாள் அறியா***
***வெல்போர்ச் சோழர் ஆமுன்அன்ன இவள்***
***நலம்பெறு சுடர் நுதல் தேம்ப***
***எவன்பயன் செய்யும் நீ தேற்றிய மொழியே*** *(ஐங்.56)*

**3. கிளவித் தலைவன் மட்டும் வருதல்**

பின்வரும் பாடலில் கிளவித் தலைவன் ஊரன் எனக் குறிக்கப்படும் பெயர் மட்டும் வருகின்றது.

## முதல், கரு, உரிப்பொருள் வழுவமைதி

குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்னும் ஐந்து திணைகளுக்கும் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்னும் தனித்தனியாகப் பாகுபாடு செய்யப்பட்டாலும் அவை நெகிழ்வுத் தன்மை உடையவை முழுமையாக வரையறுக்க முடியாது என்பதை அவை மயங்கி வருவதிலிருந்து அறிந்து கொள்ளலாம். இவ்வாறு மயங்கி வருவதைத் திணை மயக்கம் எனக் குறிப்பர்.

(41)

## முப்பொருள் வழுவமைதி என்பது

251. முத்திறப் பொருளும் தத்தம் திணையொடு
மரபின் வாராது மயங்கலும் உரிய.

முதற்பொருளும் கருப்பொருளும் உரிப்பொருளும் தத்தமக்குக் கூறிய திணையோடு மட்டுமல்லாமல் பிற திணையோடும் மயங்கியும் வரலாம்.

**1. நெய்தல் பாட்டில் முல்லையின் முதற்பொருள் மாலை மயங்குதல்**

**கறங்கு மணிநெடுந்தேர் கண்வாள் அறுப்பப்**
**பிறங்கு மணல்மேல் அலவன் பரப்ப**
**வறங்கூர் கடுங்கதிர் வல்விரைந்து நீங்க**
**நிறங்கூரு மாலை வரும்**

இந்நெய்தற் பாட்டில் முல்லைக்கு உரிய மாலை ஆகிய முதற்பொருள் மயங்கி வந்துள்ளது.

**2. குறிஞ்சிப் பாட்டில் முல்லை, நெய்தலின் கருப்பொருள் மயங்குதல்**

**மான்கணம் மரமுதல் தெவிட்ட ஆன்கணம்**
**கன்றுபயிர் குரல, மன்றுநிரை புகுதர**
**ஏங்குவயிர் இசைய கொடுவாய் அன்றில்**
**ஓங்குஇரும் பெண்ணை அகமடல் அகவப்**
**பாம்புமணி உமிழ்ப் பல்வயின் கோவலர்**
**ஆம்பல் அம்தீம்குழல் தெள்விளி பயிற்று** **(குறிஞ்.217-222)**

இக்குறிஞ்சிப் பாட்டில் முல்லையின் கருப்பொருளாகிய ஆன்கணம், பாம்பு, கோவலர், ஆம்பற்குழல் என்பவை மயங்கி வந்துள்ளன. முல்லையின் முதற் பொருளாகிய மாலையும் மயங்கி வந்துள்ளது.

மேலும் இக்குறிஞ்சிப் பாட்டில் நெய்தலின் கருப்பொருளாகிய அன்றில், பனை என்பவையும் மயங்கி வந்துள்ளன.

**3. மருதத்தின் ஊடல் என்னும் உரிப்பொருள் பாலையில் மயங்குதல்**

**வளமலர் ததைந்த வண்டுபடு நறும்பொழில்**
**முளைநிரை முறுவல் ஒருத்தியொடு, நெருநல்**
**குறிநீ செய்தனை என்ப; அலரே**
**குரவநீள் சினை உறையும்**
**பருவமாக் குயிற் கௌவையின் பெரிதே** **(ஐங்.369)**

மருதத்தின் உரிப்பொருள் ஊடல்; பாலைக்கு உரிப்பொருள் பிரிதல்; ஆனால் இந்த ஐங்குறுநூற்றுப் பாலைப் பாடலில் ஊடல் என்னும் உரிப்பொருள் வந்துள்ளது.